சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை–8
ந.க.எண். 4254 /அ3/2019, நாள்.05.08.2019

பொருள்: பள்ளிக் கல்வி – 2019–20 ஆம் கல்வியாண்டிற்கான "தமிழக அரசின் கல்வி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காக மாபெரும் தனித்திறன் உள்ள மாணவர்களை கண்டறிதல்" – நிகழ்ச்சிகளை அனுப்பக்கோருதல் – சார்ந்து.

-------

மேற்காண் பொருளின்படி, சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து வகைப் பள்ளிகளில் (Nursery, Govt., Aided, Matric, CBSE and ICSE Schools) "தமிழக அரசின் கல்வி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்காக மாபெரும் தனித்திறன் உள்ள மாணவர்களை கண்டறிதல்" பொருட்டு, அனைத்து வகையான பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் பங்கு பெறலாம் (குழு பங்களிப்பு கிடையாது).

1. **தனித்திறன்கள்:**

   பாட்டு, நடனம், பேச்சு, கவிதை, மைம்ஸ், சிலம்பம் போன்ற எந்த வகையான திறன்களாக வேண்டுமானாலும் இருக்கலாம், ஒரே மாணவர் பல்வேறு திறன்களை பெற்று இருந்தால் எந்த திறனில் சிறப்பாக உள்ளனரோ அதனை வீடியோவாக அனுப்பினால் போதுமானது, அனுப்பும்போது "தனித்திறன்" எனக் குறிப்பிடவும்.

2. அ) நிகழ்ச்சி தொகுப்பாளர் – மாணவர்

   ஆ) நிகழ்ச்சி தொகுப்பாளர் – ஆசிரியர்.

ஒரு பள்ளியில் இருந்து எத்தனை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வீடியோ வேண்டுமானாலும் அனுப்பலாம் மற்றும் அனைத்து வீடியோக்களும் 2 நிமிடங்களுக்குள் இருக்க வேண்டும் மேலும் வீடியோவை அலைபேசியில் எடுத்தாலும் பரவாயில்லை ஆனால் தெளிவாக இருக்க வேண்டும். MP4 Format இல் அனுப்பவேண்டும். அனுப்பும் வீடியோவில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் EMIS எண்., பெயர், வகுப்பு, பள்ளியின் பெயர், தனித்திறன் ஆகியவை வீடியோவின் முதலில் வருவது அவசியம்.

வீடியோக்கள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்.**07.08.2019.**